©
தமிழ்நாடு அரசு
2020

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 3.20 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 43] சென்னை, புதன்கிழமை, அக்டோபர் 21, 2020
ஐப்பசி 5, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு–2051

## பகுதி III—பிரிவு 1(a) இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை**

*அரசாணை (நிலை) எண்.143, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (வி2)த் துறை நாள்: 27 ஆகஸ்ட் 2020.*

1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 63/1948) 112ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு 1950 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் விதிகளில் செய்யக் கருதியுள்ள கீழ்க்காணும் வரைவு திருத்தங்கள், இதனால் பாதிக்கப்படகூடிய அனைவரின் தகவலுக்காக மேற்சொன்ன சட்டத்தின் 115ஆம் பிரிவில் கோரியுள்ளவாறு, இதனால் வெளியிடப்படுகிறது.

2. இந்த அறிவிக்கை, தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும் நாளிலிருந்து நாற்பத்தைந்து நாட்கள் முடிவடைந்த பின்னர், இந்த வரைவுத் திருத்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும், இது தொடர்பாக, மேற்சொன்ன காலஅளவு முடிவடைவதற்கு முன்னர், எவரிடமிருந்தேனும் வரப்பெறுகிற ஏதேனும் மறுப்புரை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்குமென்றும், இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அதனை 47/1, திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை–600 032 என்ற முகவரியில் அமைந்துள்ள தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் வாயிலாக, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை–600 009 என்ற முகவரிக்கு (இரு படிகளில்) அனுப்பி வைக்க வேண்டும்.

**வரைவுத் திருத்தங்கள்**

மேற்சொன்ன விதிகளில்,–

(1) விதி 86–இல், ''12 ஆம் படிவ எண்ணின் நெடும்பத்தி (3)'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக ''12ஆம் படிவ எண்ணின் நெடும்பத்தி (6)'' என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்;

(2) விதி 88 இன் துணை விதி (2)–இல், ''பதினைந்து காசு'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக ''ஐந்து ரூபாய்'' என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்;

(3) 103 ஆம் விதிக்குப் பதிலாக பின்வரும் விதி அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்;

அதாவது ;–

''103 **பணியாளர் வருகைப் பதிவேடு மற்றும் பதிவேடுகளை வைத்து வருதல்.**-

(1) ஒவ்வொரு தொழிற்சாலையின் மேலாளரும் தொழிற்சாலையில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களின் வருகைப்பதிவேட்டினை படிவம் 25–இல் வைத்து வருவதுடன், பணியின் ஒவ்வொரு காலத் தொடக்கத்திலும் பதிவுகள் செய்யப்பட வேண்டும்.

(2) பணி நேரங்களில் அல்லது தொழிற்சாலையில் யாதொரு பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போது, ஆய்வாளரிடம் ஆய்வுக்காக அத்தகைய தற்காலிக பணியாளர் வருகைப் பட்டியல் அனைத்து நேரங்களிலும் உடனடியாக கிடைப்பதற்கு மேலாளர் வகை செய்ய வேண்டியதுடன், கடைசி பதிவுக்குப் பின்னர் மூன்றாண்டு காலங்களுக்கு பாதுகாத்து வரவேண்டும்.

(3) படிவம் 12–இல் உரிய வயதை அடைந்த பணியாளர்கள் மற்றும் இளைஞர்கள் குறித்த பதிவேடு, படிவம் 15–இல் ஊதியங்களுடன் கூடிய விடுப்பு பதிவேடு மற்றும் படிவம் 25–இல் ஈடுசெய்யும் விடுமுறைநாட்களின் பதிவேடு ஆகியவை இதன் கீழ் குறிப்பிடப்பட்ட பதிவேடுகள் மற்றும் தற்காலிக பணியாளர் வருகைப் பட்டியல் ஆகியவற்றின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு கருதிப் பார்க்கப்பட வேண்டும், அவையாவன;–

(*i*) 75 ஆம் விதியின் படி, படிவம் XXVI–இல், ஒப்பந்த தொழிலாளரை பணியமர்த்துதல் குறித்த பதிவேடு, 78 ஆம் விதியின் துணை விதி (1)–இன் பகுதி (a)–இன் படி, படிவம் XVII–இல் ஊதியங்கள் குறித்த பதிவேடு, தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு ஒப்பந்த தொழிலாளர் சட்டத்தின் (முறைப்படுத்தலும், நீக்கலும்) 78 ஆம் விதியின் (1) துணை விதியின் (d) பகுதியின் படி, முன் பணங்கள், சேதம் மற்றும் இழப்பிற்கான பிடித்தங்கள் மற்றும் அபராதங்கள் குறித்த பதிவேடு;

(*ii*) 49 ஆம் விதியின் படி படிவம் XIII–இல், ஒப்பந்ததாரரால் பணியமர்த்தப்பட்ட பணியாளர் குறித்த பதிவேடு, 52 ஆம் விதியின் துணை விதி (2)– இன் பகுதி (a)–இன் படி, படிவம் XVII–இல் தற்காலிக பணியாளர் வருகைப் பட்டியல், 52 ஆம் விதியின் துணை விதி (2)–இன் பகுதி (a)–இன் படி, படிவம் XVIII–இல், ஊதியங்கள் குறித்த பதிவேடு, 52 ஆம் விதியின் துணை விதி (2)–இன் பகுதி (c)–இன் படி, படிவம் XIX–இல் சேதம் அல்லது இழப்பிற்கான பிடித்தங்கள் குறித்த பதிவேடு, 52 ஆம் விதியின் துணை விதி (2)–இன் பகுதி (c)–இன் படி, படிவம் XX–இல் அபராதங்கள் குறித்த பதிவேடு, 52 ஆம் விதியின் துணை விதி (2)–இன் பகுதி (c)–இன் படி, படிவம் XXI–இல் முன் பணங்கள் குறித்த பதிவேடு, 1983 ஆம் ஆண்டு மாநிலங்களுக்கிடையேயான புலம்பெயர் தொழிலாளர் (வேலைவாய்ப்பினை முறைப்படுத்தலும், பணி நிபந்தனைகளும்) (தமிழ்நாடு) விதிகளின் 52 ஆம் விதியின் துணை விதி (2)–இன் பகுதி (d)–இன் கீழ், படிவம் XXII–இல் மிகை நேரப்பணி குறித்த பதிவேடு;

(*iii*) 3 ஆம் விதியின் படி, படிவம் I–இல் தண்டத்தொகை குறித்த பதிவேடு, 4 ஆம் விதியின் படி படிவம் II–இல் பணியமர்த்தப்பட்ட நபர்களின் கவனக்குறைவு அல்லது தவறு காரணமாக வேலையளிப்பவருக்கு ஏற்பட்ட சேதம் அல்லது இழப்பிற்கான பிடித்தங்கள் குறித்த பதிவேடு, தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்கல் விதிகளின் 17 ஆம் விதியின் படி, படிவம் III–இல் பணியமர்த்தப்பட்ட நபர்களுக்கு அளிக்கப்பட்ட முன்பணங்கள் குறித்த பதிவேடு;

(*iv*) 21 ஆம் விதியின் துணை விதி (4)–இன் படி படிவம் I–இல், அபராதத் தொகை குறித்த பதிவேடு, 21 ஆம் விதியின் துணை விதி (4)–இன் படி படிவம் II–இல் பணியமர்த்தப்பட்ட நபர்களின் கவனக்குறைவு அல்லது தவறு காரணமாக வேலையளிப்பவருக்கு ஏற்பட்ட சேதம் அல்லது இழப்பிற்கான பிடித்தங்கள் குறித்த பதிவேடு, 26 ஆம் விதியின் துணை விதி (2)–இன்படி படிவம் IV–இல் தொழிலாளர்களுக்கான மிகைநேரப்பணி குறித்த பதிவேடு, 27 ஆம் விதியின் துணை விதி (5)–இன் படி படிவம் V–இல் தற்காலிக பணியாளர் வருகைப் பட்டியல் மற்றும் 1953 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் (தமிழ்நாடு) விதிகளின் 27 ஆம் விதியைச் சேர்ந்த துணை விதி (6)–இன்படி படிவம் XI–இல் தொழிலாளர்கள் குறித்த பதிவேடு;

(*v*) தமிழ்நாடு 1967 ஆம் ஆண்டு பேறுகால சலுகைச் சட்டத்தின் 3 ஆம் விதியின் துணை விதி (1)–இன் படி, படிவம் A–இல் தற்காலிக பணியாளர் வருகைப் பட்டியல்;

(*vi*) தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு தொழிலக நிறுவனங்களின் (தேசிய, திருவிழா மற்றும் சிறப்பு விடுமுறைகள்) விதிகளின் 7 ஆம் விதியின் துணை விதி (1)–இன் படி, படிவம் VI–இல் தேசிய மற்றும் விடுமுறைகள் குறித்த பதிவேடு;

(*vii*) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு தொழிலக நிறுவனங்கள் (பணியாளர்களுக்கு நிரந்தர தகுதிநிலை வழங்குதல்) விதிகளின் 6 ஆம் விதியின் துணை விதி (1)–இன் படி, படிவம் I–இல் தொழிலாளர் குறித்த பதிவேடு;

(*viii*) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பிழைப்பூதியப் படி வழங்கல் விதிகளின் 3 ஆம் விதியின் படி, படிவம் எண் I–இல், பணியிடைநீக்கம் செய்யப்பட்ட பணியாளர்கள் குறித்த பதிவேடு;

(*ix*) தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதி விதிகளின் 29 ஆம் விதியின் படி, படிவம் எண் B–இல், ஊதியங்கள் குறித்த பதிவேடு, படிவம் C–இல் அபராதங்கள் மற்றும் செலுத்தப்படாமல் சேர்ந்து வந்த தொகை குறித்த பதிவேடு;

(4) படிவம் எண்.12, படிவம் எண் 15 மற்றும் படிவம் எண்.25 க்குப்பதிலாக பின்வரும் படிவங்கள் முறையே அமைத்துக்கொள்ளப்பட வேண்டும், அதாவது:—

**படிவம் எண். 12**

(80, 86 விதிகளின் கீழ் வரையறுக்கப்பட்டது)

**உரிய வயதை அடைந்த தொழிலாளர்கள் மற்றும் இளைஞர்களின் பதிவேடு.**

தொழிற்சாலையின் பெயர் மற்றும் முகவரி

பதிவு எண்:

| | | |
|---|---|---|
| | (1) | தொடர் எண் |
| | (2) | தொழிலாளரின் பெயர் |
| | (3) | தொழிலாளரின் அடையாள அட்டை எண் |
| | (4) | பாலினம் |
| | (5) | தந்தை / கணவன் (அ) மனைவி பெயர் |
| | (6) | பிறந்த நாள் |
| | (7) | தற்போதைய முகவரி |
| | (8) | நிரந்தர முகவரி |
| | (9) | ஆதார் எண் |
| | (10) | பணியில் சேர்ந்த நாள் |
| | (11) | பதவிப்பெயர் / பணியின் தன்மை |
| | (12) | (EPF) தொழிலாளர் வருங்கால வைப்புநிதி/ UAN எண் |
| | (13) | தொழிலாளர் அரசு காப்பீட்டுக் கழகம் எண் (ESIC NO) |
| | (14) | பணியில் சேர்ந்து 480 நாட்கள் நிறைவடையும் நாள் |
| | (15) | பணி நிரந்தரம் செய்யப்பட்ட நாள் |
| | (16) | பணி இடைநீக்கம் செய்யப்பட்ட காலம் (ஏதேனுமிருப்பின்) |
| | (17) | வங்கி கணக்கு எண், வங்கியின் பெயர், கிளை (IFSC) |
| | (18) | புகைப்படம் |
| | (19) | கைபேசி எண் |
| | (20) | மின்னஞ்சல் முகவரி |
| | (21) | மாதிரி கையொப்பம் / கைப்பெருவிரல் ரேகை |
| | (22) | பணியிலிருந்து வெளியேறிய நாள் |
| | (23) | பணியிலிருந்து வெளியேறியதற்கான காரணம் |
| | (24) | குறிப்புரைகள் |

''படிவம் எண். 15

(87, 88 ஆம் விதிகளின் கீழ் வரையறுக்கப்பட்டது)

ஊதியத்துடன் கூடிய விடுப்புக்கான பதிவேடு

(பகுதி–I)

தொழிற்சாலை பெயர் மற்றும் முகவரி:

தொழிற்சாலை உரிமையாளரின் பெயர் மற்றும் முகவரி:

மேலாளரின் / பொறுப்பாளரின் பெயர்:

பதிவு எண்:

----------- ஆம் ஆண்டின் ----------- மாதத்திற்காக

| | | |
|---|---|---|
| | (1) | தொடர் எண் |
| | (2) | உரிய வயதை அடைந்த தொழிலாளர்கள் மற்றும் இளைஞர்களுக்கான பதிவேட்டில் உள்ள தொடர் எண் |
| | (3) | தொழிலாளரின் பெயர் |
| | (4) | தொழிலாளர் அடையாள அட்டை எண் |
| | (5) | மாதத்தின் தொடக்கத்திலிருந்த விடுப்பு |
| | (6) | அப்போதைய கால அளவில் ஈட்டிய விடுப்பு |
| | (7) | அந்த மாதத்தில் எடுக்கப்பட்ட விடுப்பு |
| | (8) | மாதத்தின் இறுதியில் எஞ்சியிருந்த விடுப்பு |
| | (9) | மாதத்தின் தொடக்கத்திலிருந்த விடுப்பு |
| | (10) | அந்த மாதத்தின்போது எடுக்கப்பட்ட விடுப்பு |
| | (11) | மாதத்தின் முடிவில் எஞ்சியிருந்த விடுப்பு |
| | (12) | மாதத்தின் தொடக்கத்திலிருந்த விடுப்பு |
| | (13) | அந்த மாதத்தின்போது எடுக்கப்பட்ட விடுப்பு |
| | (14) | மாதத்தின் முடிவில் எஞ்சியிருந்த விடுப்பு |
| | (15) | கருவுற்ற நிலை / பிரசவம் குறித்த அறிவிப்பு வழங்கப்பட்ட நாள் |
| | (16) | மகப்பேறினை எதிர்பார்த்து அதன் அடிப்படையில் முன்னதாகவே வழங்கப்பட்ட பேறுகால உதவித்தொகை மற்றும் தொகை வழங்கப்பட்ட நாள் |
| | (17) | தொடர்ந்து வழங்கப்பட்ட பேறுகால உதவித் தொகை மற்றும் தொகை வழங்கப்பட்ட நாள் |
| | (18) | மருத்துவ ஊக்கத்தொகையாக வழங்கப்பட்ட தொகை மற்றும் வழங்கப்பட்ட நாள் |
| | (19) | 1961 ஆம் ஆண்டு பேறுகால சலுகைச் சட்டத்தின் 9 அல்லது 10 ஆம் பிரிவின் கீழ் ஊதியத்துடன் கூடிய விடுப்பு |
| | (20) | பணியாளரிடமிருந்து நேமகம் பெறப்பட்டதா இல்லையா |
| | (21) | தொழிலாளரின் வெளியேற்றம் அல்லது இறப்பு குறித்த நேர்வில் பணிக்கொடையாக வழங்கப்பட்ட தொகை |
| | (22) | குறிப்புரைகள் |
| | | |

# (பகுதி - II)

தொழிற்சாலையின் பெயர் மற்றும் முகவரி:

தொழிற்சாலை உரிமையாளரின் சம்பளம் வழங்கும்

அதிகாரியின் பெயர் மற்றும் முகவரி:

மேலாளரின் / பொறுப்பாளரின் பெயர்:

பதிவு எண்:

பணியமர்த்தப்பட்டுள்ள மொத்த தொழிலாளரின் எண்ணிக்கை

| ஆண் | பெண் | வளரிளம் பருவ ஆண் | வளரிளம் பருவ பெண் |
|---|---|---|---|
| | | | |

----------- லிருந்து ----------- காலம் வரையிலான ஊதிய கால அளவு.

(மாதந்தோறும் / இரண்டு வாரங்களுக்கொருமுறை / வாரந்தோறும் / நாள்தோறும் / செய்யும் வேலைக்கேற்ப ஊதியம்)

| | | | | |
|---|---|---|---|---|
| | (1) | தொடர் எண் | | |
| | (2) | உரிய வயதை அடைந்த தொழிலாளர்கள் மற்றும் இளைஞர்களுக்கான பதிவேட்டில் உள்ள தொடர் எண் | | |
| | (3) | தொழிலாளரின் பெயர் | | |
| | (4) | தொழிலாளரின் அடையாள அட்டை எண் | | |
| | (5) | பணி செய்த மொத்த நாட்கள் | | |
| | (6) | அடிப்படை ஊதியம் | | |
| | (7) | அகவிலைப்படி | | |
| | (8) | வீட்டு வாடகைப்படி | | |
| | (9) | ஏனைய படிகள் (தன்மையை குறிப்பிடலாம்) | | |
| | (10) | மிகைப்பணி நேர ஊதியங்கள் | | |
| | (11) | விடுப்பு ஊதியங்கள் (ஈட்டிய விடுப்பு / தேசிய, பண்டிகை & சிறப்பு விடுப்பு / ஏனையவை) | | |
| | (12) | மொத்த ஊதியங்கள் | | |
| | (13) | வருங்கால வைப்புநிதி | முன்பணங்கள் | பிடித்தங்கள் |
| | (14) | தொழிலாளர் அரசு காப்பீடு | | |
| | (15) | தொழிலாளர் நல நிதி | | |
| | (16) | வழங்கப்பட்ட முன்பணம் | | |
| | (17) | மாதத்தின் தொடக்கத்தில் வசூலிக்காமல் நிலுவையிலிருந்த முன்பணம் | | |
| | (18) | வசூலிக்கப்பட்ட முன்பணம் | | |
| | (19) | வசூலிக்கப்பட வேண்டிய நிலுவைத்தொகை | சேதங்கள் / அபராதங்கள் | |
| | (20) | சேதங்கள், இழப்புகள் அல்லது அபராதங்கள் வகையில் விதிக்கப்பட்ட பிடித்தம் | | |
| | (21) | மாதத்தின் தொடக்கத்தில் வசூலிக்காமல் நிலுவையிலிருந்த பிடித்தத் தொகை | | |
| | (22) | சேதங்கள், இழப்புகள் அல்லது அபராதங்கள் வகையில் செய்யப்பட்ட பிடித்தம் | | |
| | (23) | நிலுவையிலுள்ள வசூலிக்கப்பட வேண்டிய தொகை | | |
| | (24) | ஏனைய யாதொரு பிடித்தங்கள் | | |
| | (25) | மொத்த பிடித்தங்கள் | | |
| | (26) | நிகர ஊதியங்கள் | | |
| | (27) | தொகை செலுத்தப்பட்ட நாள் | | |
| | (28) | செலுத்தப்படாத சேர்ந்து வந்த தொகை | | |
| | (29) | கணக்கிடப்பட்ட பிழைப்பூதியப் படியின் விகிதம் மற்றும செலுத்தப்பட்ட தொகை | | |
| | (30) | தொழிலாளரின் இரசீது / வங்கி பரிவர்த்தனை எண் / நாள் | | |
| | (31) | குறிப்புரைகள் | | |

''படிவம் எண். 25

(77 (4), 103 ஆம் விதிகளின் கீழ் வரையறுக்கப்பட்டது)

நாட்பணியாளர் பட்டியல் மற்றும் ஈடுசெய்யும் விடுமுறை நாட்களின் பதிவேடு

............... லிருந்து ................ வரையிலான கால அளவிற்கானது

தொழிற்சாலையின் பெயர் மற்றும் முகவரி:

பண்டிகைக்கால விடுமுறைகள் ஒப்புதலளிக்கப்பட்ட செயல்முறை ஆணைகள் எண் & நாள்:

ஒப்புதலளிக்கப்பட்ட பண்டிகைக்கால விடுமுறைகள்:

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| | | | | |

பதிவு எண்:

| | | | | |
|---|---|---|---|---|
| | | 1 | தொடர் எண் | |
| | | 2 | உரிய வயதை அடைந்த தொழிலாளர்கள் மற்றும் இளைஞர்களுக்கான பதிவேட்டில் உள்ள தொடர் எண் | |
| | | 3 | தொழிலாளரின் பெயர் | |
| | | 4 | தொழிலாளரின் அடையாள அட்டை எண் | |
| | | 5 | வேலை தொடங்கும் நேரம் | |
| | | 6 | ஓய்வு இடைவேளை | |
| | | 7 | வேலை முடிவடையும் நேரம் | |
| நேரம் | இடைமாற்றீடு நேரம் | 8 | முறை மாற்றங்களின் திட்டம் | |
| | | 9 | 1 | மிகைப்பணி நேரம் உட்பட அன்றாட பணி நேரம் (தேதிவாரியாக)* |
| | | | 2 | |
| | | | 3 | |
| | | | 4 | |
| | | | 5 | |
| | | | 6 | |
| | | | 7 | |
| | | | 8 | |
| | | | 9 | |
| | | | 10 | |
| | | | 11 | |
| | | | 12 | |
| | | | 13 | |
| | | | 14 | |
| | | | 15 | |
| | | | 16 | |
| | | | 17 | |
| | | | 18 | |
| | | | 19 | |
| | | | 20 | |
| | | | 21 | |
| | | | 22 | |
| | | | 23 | |
| | | | 24 | |
| | | | 25 | |
| | | | 26 | |
| | | | 27 | |
| | | | 28 | |
| | | | 29 | |
| | | | 30 | |
| | | | 31 | |
| | | 10 | வேலை செய்த மொத்த நாட்கள் | |
| | | 11 | வேலை செய்த மொத்த நேரம் | |
| | | 12 | ஊதியமில்லா விடுப்பெடுத்த மொத்த நாட்கள் | |
| | | 13 | தேசிய விடுமுறை நாளில் வேலை செய்ததற்காக பெறப்பட்ட பயன் (**) | |
| | | 14 | பண்டிகை விடுமுறை நாளில் வேலை செய்ததற்காக பெறப்பட்ட பயன் (**) | |
| | | 15 | குறிப்புரைகள் | |

(தமிழாக்கம்)

**முகமது நசிமுத்தீன்,**
*அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.*

**இ. சுபாமதி,**
*இயக்குநர் (முகூ.பொ.)*
*தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் (மொழிபெயர்ப்புத்) துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.